உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 17 | விசுவாவசு௵ பங்குனித் திங்கள் 1௳ [14-3-66] | இதழ் 3

நீதிநெறி விளக்கம்

(கட்டுரை 2)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

கல்வியே கண். கல்வியில்லார்க்குள்ள கண் புண்ணேயன்றிக் கண்ணல்ல. உடலிலிருந்து வாழும் உயிர்க்கு அழிவில்லை. உடற்கு அழிவுண்டு. அழியும் உடற்கண் ஒட்டிய அழியுங் கண்ணினும் அழியாத உயிரை ஒட்டிய அழியாத கல்வியாகிய கண் எவ்வாற்றாலும் மேலானவை என்பது எல்லார்க்கும் வெளிப்படும். அவ்வழியாக் கண்ணால் அழியாத அறனும், அழியும் பொருளும், அழியாப் பொருளும், அழியும் இன்பமும், அழியாத இன்பமும் கற்றவனே அறியவும் ஆக்கவும் அடையவும்

படும். படவே, ஆசிரியர் குமரகுருபர முனிவரர் தம் நூலின் தொடக்கத்திலே எடுத்த எடுப்பிலே 'அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும் .... கல்வி' என்று கூறியருளினர். முன்னரே 'எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்' என்ற பழமொழியும் தோன்றிற்று.

"எண்ணென்பது கணிதம். அது கருவியுஞ் செய்கையும் என இரு வகைப்படும். அவை 'ஏரம்பம்' முதலிய நூல்களுட் காண்க. எழுத்தெனவே அதனொடு ஒற்றுமையுடைய சொல்லும் அடங்கிற்று. இவ்விரு திறமும் அறமுதற் பொருள்களைக் காண்டற்குக் கருவியாதலின், கண் எனப்பட்டன. அவை கருவியாதல்

'ஆதி முதலொழிய அல்லா தனஎண்ணின்
நீதி வழுவா நிலைமையவால் — மாதே
அறம்ஆர் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறம் ஆமோ எண் இறந்தால் செப்பு?'
'எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தால்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும்; மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்.'

(என்ற) இவற்றான் அறிக". (பரிமேலழகர் உரை). அவ்வுரையையுடையது

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு"

என்னுந் திருக்குறள். இதில் 'வாழும் உயிர்' என்றது எதனை? மக்களுயிருள்ளும் உணர்வு மிகுதியுடையதனை. வாழ்தல் என்றதன் பொருள் யாது? உணர்வில்லாததற்கும் உணர்வு குறைந்ததற்கும் இல்லாத சிறப்பு உணர்வு மிக்குள்ள உயிர்க்கு உண்டு. அதனுல்தான் பரிமேலழகர் 'வாழும் உயிர்' என்றதற்குச் 'சிறப்புடையுயிர்கள்' என்றுரைத்தார். இப்பொருள் உலக வழக்கிலும் உளது. அச்சொல்லாட்சியைக் கூர்ந்து நோக்குவார்க்கு அது புலப்படாதிராது. 'கண்ணென்ப' என்றதால்,

அவ்விரண்டும் (எண்ணும் எழுத்தும்) 'கண்' என்னும் பெயர் பெறுமுன் 'எண்' 'எழுத்து' என்னும் பெயருடையவை எனல் தெரிந்ததே. தெரியவே, அவ்வெண்ணும் எழுத்தும் (எண்ணை யுணர்த்தும் நூல்களும் எழுத்தையுணர்த்தும் நூல்களும்) இக் குறளால் உணர்த்தப்படுதல் வேண்டிற்று என்பது விளங்கும். இதற்கு முற்பட்ட குறட்பாவிலே, 'கற்க கசடறக் கற்பவை' எனப் பொதுப்படக் குறித்த நூல்கள், இதிற் சிறப்பிற் கூறப் பட்டன. பரிமேலழகர், இதன் உரை முடிவில், 'இதனாற் கற்கப் படும் நூல்கட்குக் கருவியாவனவும் அவற்றது இன்றியமை யாமையுங் கூறப்பட்டன' என்றுரைத்ததுணர்க. எண்ணும் எழுத்துமாகிய கல்வி(ஞான)க் கண் உடைமை வாழும் உயிர்க்கே உண்டு, 'தேயம் இடையிட்டவற்றையும் காலம் இடையிட்டவற்றையும் காணும் ஆற்றல் அத்தகைய ஞானக் கண்ணுக்கே உரியது. அக்கண்ணுடையவர் கற்றுேரே ஆவர். ஆகவே திருவள்ளுவர் "கண்ணுடையர் என்பவர் கற்றுேர்" என்றறுதியிட்டுரைத்தருளினுர். கல்வியே கண். அக்கண்ணு டையவரே கற்றுேர் என்ற அளவில் நில்லாது, கல்வியின்மை குருடு. அதையுடையார் குருடர். முகத்தில் இரண்டு கண் இருந்தாலும் அவை கண்ணெனை மதிக்கப்படா. புண்ணெனவே எண்ணப்படும் என்றுர் பொய்யாமொழிப் புலவர்.

'கண்ணுடையர் என்பவர் கற்றுேர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'.

இதற்குக் காரணம் பரிமேலழகர் பின்வருமாறு கூறினுர்.

"அஃது (அத்தகு ஞானக்கண்) இன்றி நோய் முதலிய வற்றுல் துன்பம் செய்யும் ஊனக்கண்ணே உடைமையின் கல்லாதவரைப் புண்ணுடையர் என்று(ம்) கூறினுர். மேற்கண் அன்மை உணர நின்ற ஊனக் கண்ணின் மெய்ம்மை கூறிய வாற்றுல் பொருள் நூல்களையும் கருவி நூல்களையும் கற்றுரது உயர்வும் கல்லாதாரது இழிவும் இதனுல் தொகுத்துக் கூறப் பட்டன."

இங்குப் புலவர் அறியற் பால தொன்றுண்டு. 'கல்வி' என்ற அதிகாரத் துரையில், பரிமேலழகர் கருத்துக் கூறிய

திறத்தில் குறள் மூன்றுவதும் ஐந்தாவதும் சேர இருத்தற்குரியன என்பதுணரப்படும். அப்படியின்மையால், 'தொகுத்துக் கூறப்பட்டன' 'வகுத்துக் கூறப்பட்டது' என்றதன் பின், ஐந்தாவது குறளுரை முடிவில், மூன்றுவது குறளுரை முடிவில் எழுதியது போல் எழுதியதறிக. திருக்குறளுரையாசிரியர் பலரும் அக் குறட்கிடக்கை முறையை ஒன்றுபடக் கொள்ளாமை ஈண்டு நோக்கத் தகும்.

கல்வி அறம் பயக்கும் உண்மையைப் பலர் தத்தம் அநுபவத்திற் கண்டிருப்பர். நாலடியாரில்,

'அருளின் அறம் உரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்'

என்று கல்வி அறம் பயக்கும் உண்மையையும்,

'பொருள் அல்லா
ஏழை அதனை (அறம் உரைக்குஞ் சொல்லை) இகழ்ந்
துரைக்கும். பாற்கூழை
மூழை சுவைஉணரா தாங்கு'

என்று கல்லாமை அறம் பயவாத் தன்மையையும் உணர்த்திய வாறு காண்க. நாலடியாரில், 'அவ்வியமில்லார்' 'இமைக்குமளவில்' முதலிய பல பாடல்களால் இவ்வுண்மையுணரப்படுதலை ஆண்டு நோக்கியுணர்க.

பொருள் இன்பம் கல்வியால் எய்தும் உண்மைக்குச் சான்று காட்டல் வேண்டா. கல்லார்க்கும் அவை எய்தும். கல்வியால் பொருளும் இன்பமும் எய்துதற்கும் கல்லாமையால் அவை எய்துதற்கும் பயனுகர் திறத்திற்கும் நெடுவாகியுண்டு.

கல்வியால் வீடு எய்தும் என்பதில் ஓர் ஆராய்ச்சி இங்கு வேண்டும். வீடுதருங் கல்வி எனச் சிறப்பாக ஒன்றுண்டு. 'கல்வி' என்ற பொதுமை வீடு கிடைப்பதற்கு ஏதுவாகாது. உலகாயத நூற் கல்வி முதலியன வீடு பயவாதனவேயாம்.

'அலகுசால் கற்பின் அறிவன்நூல் கல்லாது
உலகநூல் ஓதுவ தெல்லாம் கலகல

கூஉந் துணையல்லால் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணைஅறிவார் இல்'

என்று நாலடியாரில் அவர் மத நூல்களுள் அறிவன்நூல், உலக நூல் என்று இருதிறம் காட்டி, அவற்றுள் அறிவன் நூல்களை ஓதுவதே வீட்டுநெறி காட்டும் என்றதறிக. அறிவன் நூல்களுள்ளும் சமய வேறுபாட்டால் பலவேறுகும். ஆதலின், 'வீடும் பயக்கும்.........கல்வி' என்ற நீதிநெறி விளக்கத்திற்குப் பொருள் கொள்ளுங்கால், சைவ சித்தாந்த நூற் கல்வியே வீடுபயக்கும் என்று ஆசிரியர் குமரகுருபர முனிவரர் உணர்த்தியருளினர் என்று கொள்ளல் இன்றியமையாதது. வீட்டு நினைவையே தோற்றுத வறட்டுக் கல்வி இக்காலத்திற் பெருகி வளர்ந்திருப்பதை எல்லாரும் உணர்வர். 'கல்வியிற் புள்ளியில்லாக் கல்வி யிக்காலக் கல்வி' என்ருன் இப்போதுள்ள கவிஞருள் ஒருவன். அதுவோ வீடுதரும்?

இந்நீதிநூலாசிரியர் வீடுபயக்குங் கல்வி சைவ சித்தாந்த நூற்கல்வியே என்று கொண்டமைக்குச் சான்று, பண்டார மும்மணிக்கோவையுள்.

"முற்படு மாயை முதற்கரை நாட்டிற்
பற்பல புவனப் பகுதி பற்றி
ஈரிரு கண்ணுற் றெழுதரம் வகுத்த
ஆறே ழிரட்டி நூறு யிரத்த
செயற்படு செய்களின் உயிர்ப்பயிர் ஏற்றி
ஊழ்எனப் பட்ட தாழ்புனற் படுகரில்
தெய்விகம் முதலாச் செப்புமும் மதகும்
ஒவ்வொரு மதகாய் உடன்உடன் திறந்து
தாகம் என்னும் தனிப்பெருங் காலில்
போகம் என்னும் புதுப்புனல் கொணர்ந்து
பாயும்ஐம் பொறியாம் வாய்மடை திறந்து
பருவம் பார்த்து வரல்முறை தேக்கலும்
இதத்துடன் அகிதம் எனும் இரண் டுற்றில்
புதுப்புனல் பெருகிப் புறம்புஅலைத்து ஒட
வார்புன லதனை மந்திரம் முதலா

ஓர் அறு வகைப்படும் ஏரிகள் நிரப்பி
விளைவன விளைய விளைந்தன அறுத்தாங்கு
ஒருகளம் செய்யும் உழவன் ஆகி
மாநிலம் புரக்கும் மாசிலாமணி
ஞான சம்பந்த ஞான தேசிக
நல்லருட் டிறத்தால் நம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண் டுய்கஎனக்
குடிலை என்னும் தடவயல் நாப்பண்
அருள்வித்து இட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதம் என்னும் பாதவம் வளர்த்தனை;
பாதவ மதனில் படுபயன் பலவே.

அவற்றுள்,

1 இலைகொண் டுவந்தனர் பலரே; இலை ஒரீஇத்
2 தளிர்கொண் டுவந்தனர் பலரே; தளிர் ஒரீஇ
3 அரும்பொடு 4 மலர் 5 பிஞ்சு 6 அருங்காய்
என்ற இவை விரும்பினர் கொண்டுகொண்டு உவந்தனர் பலரே;

அவ்வாறு உறுப்பும் இவ்வாறு பயப்ப,
ஒரும் வேதாந்தம் என்றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப 7 அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே. யான் அவர்
நன்னிலை பெறுதற்கு அன்னியன் ஆயினும்
அன்னவர் கமலப் பொன்னடி விளக்கி அத்
தீம்புனல் அமுதம் ஆர்ந்தனன். அதனால்
வேம்பு எனக் கொண்டனன் விண்ணவ ரமுதே;''

என்றுள்ள தலைசிறந்த (உத்தமோத்தமச்) செய்யுள் ஆகும். இதன் விரிவுரையைக் 'குமரகுருபரன்' பழந்தொகுதிகளுள் எம்மால் எழுதப்பட்டவற்றுட் காணலாம். 'விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும் அரும்புமலர் காய்கனி அன்றோ பராபரமே' என்றதையும் ஈண்டுக் கருதுக.

இதிற்காணும் ஞானவுழவர் தருமைக் குருதேசிகருள் நாலா மவராகி விளங்கியருளியவர், அவரே குமரகுருபர முனிவரை

ஆட்கொண்டருளிய ஞானதேசிகர். அவரிடம் அக்காலத்தில் உபதேசம்பெற்று ஞானத்திற் சிறந்து பேரின்பம் உற்றவர் பற்பலர். அவருள் ஒருவர் திருவுத்தரகோசமங்கைப் புராணத்தின் ஆசிரியர். அவர் அப்புராணத்தில் அருளிய குருதோத்திரப்பாடல் இக்குருமகா சந்நிதானத்தின் ஒப்புயர் வில்லாத திப்பியத்தை இனிது விளக்குகின்றது. அப்பாடலின் சொல்நயம் பொருள்நயம் முதலியவற்றைப் புலப்படுத்த எமக் குச்சிறிதும் ஆற்றல் இல்லை. இன்றேனும் அதனைப் பலமுறை பாடிப் பயன் நுகரும் வேட்கைக்கு அளவில்லை, அப்பாடலாவது.

"ஆசில்சீர் அகச்சமயக் கமலங்கள் வாய்திறப்ப
அவிச்சை என்னும்
மூசுபேர் இருள்கரப்பப் புறச்சமயக் குமுதங்கள்
முகங்கள் கூம்பத்
தேசுலாஞ் சிவஞானச் சுடர்பரப்பி இரவியெனத்
திகழுந் தன்மை
மாசிலா மணிஞான சம்பந்தன் பூங்கழல்கள்
வணங்கல் செய்வாம்,"

இதில், 'தருமை' என்ற பெயரைத் 'தன்மை' என்று அமைத் தருளினார் இதன் ஆசிரியர். அதனால், இப்பாடலாற் போற்றப் பெற்ற குருமணியின் இடம் இனிது விளங்க வழியின்றிப் போயிற்று, போகவே, இவரது திருமடத்தாதீனம் வேறுபடக் கொள்ளப்பட்டது.

கர்மம், கருமம், கன்மம் என்றும் வர்மம், வருமம், வன்மம் என்றும், பெருமகன், பெர்மகன், பெர்மான், பெம்மான் (மஹா தேவன்) என்றும் அருமகன், அர்மகன், அர்மான், அம்மான் என்றும் உள்ள திரிபுகளை உணர்ந்தால், தருமை, தர்மை தன்மை எனத்திரிந்த உண்மை புலனாகும், ஆகவே தருமைத் திருமடத்தில் நாலாமவராக வீற்றிருந்து குமரகுருபரர் முதலிய பக்குவசீலர்களுக்கு ஞானோபதேசம் புரிந்தருளிய சீலஸ்ரீ மாசிலாமணி தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைத் திருவுத்தரகோசமங்கைப் புராணாசிரியர் துதித்த உண்மை தெளிவுறும், இச்செய்யுளைப் பலமுறை ஓதியுணர்பவர்க்கே

இதன் பொருட்சிறப்பு முதலியன நன்கு விளங்கும்.

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் உறுங்கவல் ஒன்று
உற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை' (நீதிநெறிவிளக்கம், க)

குறிப்பு:-

அறமும் பொருளும் இன்பமும் வீடும் பயக்கும் என முதல் ஈரிடத்தும் உம்மை கூட்டிப் பொருள்கொள்க. உம்மை எண்ணும்மை 'வீட்டின் சிறப்பை நோக்கி வீடும் என அதனைத் தனியே உம்மை கொடுத்துப்பிரித்துக் கூறினர்' என விரித்துக் கூறியது வீண் - புறங்கடை. 'கடைப்புறம்,' புறமாகியகடை, கல்வியுடையார் இருக்கும் இடத்திற்குப் புறம் ஒருசிறிது அன்று, உலகமெல்லாம் அதன்புறமே, புறங்கடை என்றது உலகில் என்றதாம். கல்வியுடையார் உலகில் எவ்வளவு வியாபகம் உடையவர்? அவ்வளவும் 'புறங்கடை' என்றதாற் கொள்ளப்படும், படவே கல்வி நாட்டிய நல்லிசைக்கு அவ்வளவும் இடமாம். உறுங்கவல் - மிக்க கவலை; பெருந்துன்பம் உற்ற உழி - அடைந்த வேளை; அடைந்த இடம், 'உழி' என்றது காலம் இடம் இரண்டற்கும் பொது, ஏழனுருபு பொருள் இடம் காலம் முதலிய பலவற்றிலும் வரும், கைகொடுக்கும்- துயரினீக்கித் தாங்கும், கல்வி பயக்கும், கல்விநாட்டும்; கல்வி கைகொடுக்கும் என எழுவாயும் பயனிலையுமாகக் கொள்க, அக்கல்வியின் ஊங்கு உயிர்க்குத்துணை இல்லை என்று உரைத்துக் கொள்க. ஊங்கு-மிகுதி, மேற்படல்,

'அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன்' அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கு 'இல்லைகேடு' என்னுங் குறளுரையில், பரிமேலழகர், 'உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது?' என்றும் 'அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமும் இல்லை. அதனை மயக்கத்தால் மறத்தலின் மேற்பட்ட கேடும் இல்லை' என்றும் உரைத்தமையுணர்க.

கல்வியி னூங்கில்லை எனச்சீர் பிரித்தல் வேண்டும்.
கல்வியினூங் கில்லை எனப்பிரிப்பது தளைக்கேடு விளைக்கும்,

'ஒருநா ளுணவை யொழியென்றால் ஒழியாய் என்றும்
'விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனே'

என்றும் சீர் பிரிப்பார் இயல்பை யார்பிரிப்பார்?

'அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதுந்
திருவா சகத்தைத் தெளிந்தால் – கருவிடம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்'

என்றுள்ளதில், 'தாமெழுதும்' என்றது காய்ச்சீர். அதன்முன் 'திரு' என நிரையசை நிற்கலாமா? அம்பலவர் தீட்டுந் திருவாசகத்தை என்றிருந்ததுபோலும், அதற்கு அடுத்த பாட்டில், 'தமிழ்மாலைத் திரு' என்றிருப்பதும் அத்தகு குற்றமே.'உரைத்ததமிழ்' என்று ஒரு சீராக்கினும் பொருந்தாது இக்காலப் பாவலர்க்கு எதுவும் பொருந்தும்.

'சிற்றுயிர்' என்றது உயிர்க்குயிராகிய பேருயிரை நோக்கி, பிறிதினியைபுநீக்கிய அடைமொழி அவ்வுயிரின் பெருமையும் இவ்வுயிரின் சிறுமையும் சிவஞானபோதம் சிவஞானசித்தியார் முதலிய உண்மை நூல்களால் உணர்க, 'சிவன் சீவன் என்றிரண்டுஞ் சித்து ஒன்றும் என்னில்' எனத் தொடங்கும் திரு விருத்தத்தால் உயிரின் சிறுமை மிகத் தெளிவுறும்.

(தொடரும்)

சேக்கிழார் துதி

தூக்கு சீர்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபி ரானெங்கள்
பாக்கி யிப் பய னுப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி யிருத்துவாம்

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 17. இதழ் 2-ன் தொடர்ச்சி

The Fruit of Grace endeth the Cycle of Births And Granteth the vision of the Lord

105. அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார் தோட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவியுணர்விக்கும்;
உண்ணிற்ப தெல்லாம் ஒழிய, முதல்வனைக்
கண்ணுற்ற நின்ற கனியதுவாகுமே.

In the garden of the Heavenly Father
Is that Damsel of Grace;
Approacheth thee, She
Revealeth the mystery of the births beyond count,
And destroyeth their very seed;
And thou visionest the Primal One;
That, indeed, is the fruit of Her Grace.

எந்தையாம் இறைவன் தெய்வீகப் பூங்காவில் அருளை நல்கும் சக்திப்பெண் அமர்ந்திருக்கின்றாள்; எண்ணற்ற பிறப்பின் உண்மையை உணர்த்த வல்லவள்; ஆன்மாவைப் பிணித்து நிற்கும் மூலமலத்தை வேரறுத்து, இறைவன் திருக் காட்சியை அளிக்கவல்லாள்; அதுவே அவள் அளிக்கும் அருட் கனியாகும்.

They that adore Her shall be granted the things spiritual

106. பிறப்பை அறுக்கும்; பெருந்தவம் நல்கும்;
மறப்பை அறுக்கும்; வழிபடவைக்கும்;
குறப்பெண், குவிமுலை கோமளவல்லி;
சிறப்பொடு பூசனை செய்ய நின்றார்க்கே

She is the Damsel of the montane regions;
Of shapely breasts and delicate beauty;
If thou in devotion adoreth Her,
She cuts the bonds of birth asunder;
Granteth the prowess of mighty tapas;
Scorcheth the soul's forgetfulness;
And leadeth thee to the path of salvation.

அருட்சத்தி குறப்பெண்; குவிமுலைஅழகி; கோமளக் கொடி போன்ற மென்மையள்; அவளை அன்போடு வணங்குவோர் பிறவித்தளையை அறுக்கிறாள்; பெருந்தவ ஆற்றலை அளிக்கின்றாள். வீடுபேறடையும் வழியை வகுக்கின்றாள்.

The Light of Grace illumineth the Path of the Devotee

107. தாங்குமின், எட்டுத்திசைக்கும் தலைமகன்;
பூங்கமழ் கோதைப் புரிகுழலாளொடும்
ஆங்கது சேரும், அறிவுடையார் கட்குத்
தூங்கொளி நீலம் தொடர்தலுமாமே.

He is the Lord of all Space in directions eight;
Bear thou His holy Feet on thine head,
And He shall appear to you
With His consort of Grace
Decked in clusters of fragrant blooms
In Her twisted tresses;
And for they are thus made wise
The Blue Flame of Her floating Grace
Shall, for ever, illumine the Path.

எட்டுத்திக்குகளுக்கும் இறைவனாக விளங்கும் தலைவன் திருவடிகளை உச்சிமேல் கொள்ளுமின். நறுமணம் கமழும் மலர் கொத்துக்களை கூந்தலிலே பின்னிமுடித்த அருட் சத்தியோடும் அவன் தோன்றுவான்; அங்ஙனம் ஞானம் பெற்றோர்க்கு அருட் சத்தியின் நீல ஒளி நிலைபெறத்தொடரும்.

The Lord draweth near when Grace visiteth

108. நணுகினும் ஞானக் கொழுந்து ஒன்று நல்கும்;
பணிகிலும் பன்மலர் தூவிப்பணிவன்;
அணுகிய தொன்று அறியாத ஒருவன்
அணுகும்; உலகெங்கும் ஆவியுமாமே.

Seek close,
That soft flame of Wisdom shall grant thee
The peerless gift of Grace;
When thou adore Him
Do so, showering blooms at His Feet
As I do.
Then shall He draw near thee
Whom nothing can ever near;
He is truly the life pervasive of allworlds.

அடுத்தவர்களுக்கெல்லாம் ஞானஒளியாம் ஒப்பற்ற அருளை அவள் நல்குகின்றாள். வணங்குங்கால் பன்மலர்த் திரளால் அவனை அருசித்து வணங்குங்கள். நான் அவ்வாறு செய்கின்றேன். தன்னை எதுவும் வந்து அணுகுவதற்கரியவன், தானேநும்மை அணுகுவதற்கரியவன், தானேநும்மை அணுகுவான். அனைத்து உலகங்களுக்கும் அவனே உயிராக இருக்கின்றான்

(தொடரும்)

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

(மலர் 17. இதழ் 2-ன் தொடர்ச்சி)

மடநடைத் தெய்வக் குறப்பாவை திருவுருவின்
மயிலிளஞ் சாயலுநிலா
மணிவட மறப்புடைத் திறுமாந்த கனதன
வனப்பும் குறித்துநோக்கி
இடுகிடைப் பாவிக் கினிப்பிழைப் பில்லைகொல்
எனத்திரு வுளங்குழைந்தாங்
கேந்திளங் கொங்கையை யிணைப்புயத் தேந்திநின்
றெல்லா வுறுப்புநிற்கக்
குடமுலைக் கேயிவள் குடிப்பிறப் புக்கியை
குணங்கிடைத் ததுகொலென்றக்
கோதைநெடு நாணெய்த வவயவங் கட்குள
குணுகுணந் தனிதெரிக்கும்
தடமலர்க் கைத்தலஞ் சேந்தொளி துளும்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தையலு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. 35

இளநடையையுடைய உயர்ந்த குறப்பாவையாகிய வள்ளி நாயகியினது திருவுருவிலே பொருந்திய மயிலினது இளஞ் சாயலையும், ஒளி வீசுகின்ற மணிவடங்கள் அறும்படியாகப் புடைத்து இறுமாந்திருக்கின்ற பருத்த கொங்கைகளின் அழகையும் கூர்ந்து பார்த்து, "சுருங்கிய இடையாகிய பாவிக்கு இனிப் பிழைப்பில்லை கொல்லோ" எனத் திருவுள்ளம் குழைந்து, அவளது மேலெழுந்த இளங் கொங்கைகளை இரண்டு புயங்

களிலும் ஏந்தி நின்று, மற்ற எல்லா உறுப்புக்களும் இருக்கக், குடம் போன்ற கொங்கைகளுக்கு மட்டும் இவளது வேடர் குடிப்பிறப்புக்கியைந்த கொலைக்குணம் இயைந்தது போலு மென்று, அந்நங்கை மிகுந்த நாணத்தை அடையும்படி உறுப் புக்களுக்குள்ள குணுகுணங்களைத் தனித்தனியே சுட்டிக்காட் டித் தெரிவிக்கின்ற விசாலமான மலர் போன்ற கைகள் சிவந்து ஒளி வெளிப்படும்படி ஒரு சப்பாணி கொட்டியருளுவாயாக. தையல் நாயகி மருவுகின்ற தெய்வநாயகனது மைந்தனே! சப் பாணி கொட்டியருளுவாயாக.

விண்ணென் கடற்புவன முடவுப் படத்தேந்து
வேந்துபொலி பாந்தள்வைப்பும்
விரிநீர் வரைப்புமெழில் விஞ்சைய ரிருப்புமுகை
விண்டுநறை விரிமுண்டகக்
கண்ணன் றிருப்பதமு நான்முகக் கடவுள்பூங்
கஞ்சமுங் குலிசப்பிரான்
கற்பகக் காவுநின் தொண்டர்கள் தொழும்புக்கொர்
காணியா வைத்துமற்றத்
திண்ணென் றடக்கைவெஞ் சிலைவேடர் குடிகொண்ட
சீறூரு முரூர்தொறும்
செந்தினைப் புனமுடு தண்சாரல் பிறவுமாம்
சீதனக் காணிபெற்றத்
தண்ணென் குறிஞ்சித் தலந்தலை யளிப்பவன்
சப்பாணி கொட்டியருளே
தையலு யகிமருவு தெய்வநா யகன்மதலை
சப்பாணி கொட்டியருளே. 36

'விண்' என்னும் ஒலியைச் செய்கின்ற கடல் சூழ்ந்த பூமியை வளைந்த படத்திலே ஏந்துகின்ற வேந்தனாகிய ஆதிசேடன் விளங்குகின்ற நாகலோகமும், விரிந்த கடல் வரைப்பாகிய நிலவுலகமும், அழகிய வித்தியாதர வுலகமும், அரும்பு விரிந்து தேன் துளிக்கின்ற தாமரைக் கண்ணனாகிய திருமாலிருக்கும் வைகுந்த வுலகமும், நான்முகக் கடவுளது பூந்தாமரையும், வச்சிரப் படையையுடைய இந்திரனது கற்பகச் சோலையும் உனது தொண்டர்களது தொண்டுக்கு ஒரு காணியாக வைத்து, வலிமையையுடைய பெரிய கையிலே

கொடிய வில்லைத் தாங்கிய வேடர்கள் வாழ்ந்த சிறிய ஊரையும், ஊர்கள் தோறும் செவ்விய திணைப்புனங்கள் நிறைந்த தண்ணிய சாரல்களையும் பிறவற்றையும் வள்ளி நாயகியின் சீதனக்காணியாகப் பெற்று, அந்தத் தண்மை பொருந்திய குறிஞ்சித் தலங்களுக்குத் தலையளி செய்பவனே! சப்பாணி கொட்டியருளுவாயாக. தையல் நாயகி மருவுகின்ற தெய்வ நாயகன் மைந்தனே! சப்பாணி கொட்டியருளுவாயாக.

கடலைச் சுவற வடித்து மிடித்துக்
கனவரை துகள்கண்டும்
கடிதிற் றிரிய வகுப்பதை யொப்பக்
காரவு ணக்கடலின்
உடலிற் பெருகிய குருதிக் கடல்பிண
வோங்கலொ டோங்கவமைத்
தொட்டிய வொட்டல ரிற்பிற கிட்டவர்
ஒழியப் பிறரையெலாம்
தடவுத் தாழியின் மத்தெறி தயிரிற்
றத்துதி ரப்புனலிற்
றசைகுடர் நிணமொடு மூளை குழம்பச்
சமர்விளை யாடல்செயும்
குடுமிச் சுடர்வடி வேலைத் தொட்டவ
கொட்டுக சப்பாணி
கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன்
கொட்டுக சப்பாணி 37

கடல் நீரானது வற்றும்படி வடித்தும், பெரிய கிரவுஞ்ச மலையை இடித்துத் தூளாகச் செய்தும், விரைவில் மீண்டும் அவற்றை உண்டாக்குவதை யொப்ப, கரிய அசுரர் கூட்டத்தின் உடலிற் பெருகிய இரத்தக்கடல், பிணமலையோடு உயரும்படி அமைத்து, வஞ்சினங் கூறி எதிர்த்த பகைவர்களில் புறங்காட்டி ஓடியவரொழிய மற்றவரை யெல்லாம், பெரிய மண்பானையினிடத்து மத்தெறி தயிரைப்போலக் குழம்புகின்ற இரத்த நீரிலே தசையும், குடரும், நிணமும், மூளையுமாகியவை கலந்து போராடல் செய்கின்ற உச்சியையுடைய ஒள்ளிய கூர்மையாகிய வேலைத் தொட்டவனே! சப்பாணி கொட்டுவாயாக. கொழிக்கின்ற தமிழ் வழங்கும் வேதபுரியில் வீற்றிருக்கின்ற குமரேசனே! சப்பாணி கொட்டுவாயாக.

(தொடரும்)

திருநீறு பேணியோர்

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M. A., B. O. L.,

திருப்பனந்தாள்.

பெரிய புராணத்தில்

சைவ சமயிகளுக்குச் சின்னமாக விளங்குவது திருநீறு. சைவ சமய நெறியைத் திருநீற்றுநெறி என்று வழங்குவர். திருநீறும் கண்டிகையும் அஞ்செழுத்தும் பொருளாக் கொண்டவர் கூட்டமே, நாயன்மார் திருக்கூட்டம். தில்லைவாழ் அந்தணர்களை 'உறுவது நீற்றின் செல்வம் எனக்கொளும் உள்ளம் மிக்கார்' என்று சேக்கிழார் கூறுவர்.

திருக்கூட்டச் சிறப்பைக் கூறவந்த சேக்கிழார், அடியவர் மேனிமேல் நீற்றொளி உடைமையாலும், ஐந்தெழுத்து ஓசை பொலிதலாலும் தேவாசிரிய மண்டபம் பாற்கடல் போன்றது என்று கூறுவர். அன்றியும் அடியார்கள் 'மாசிலாத மணி திகழ் மேனிமேல் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' என்று புனிதத் தன்மைக்குத் திருநீற்றை உவமை கூறியுள்ளார்.

மெய்ப்பொருள் நாயனார் அன்பர் வேடமே சிந்தை செய்பவர். அவருடைய பகைவன் வெண்ணீறு சாத்தும் அப்பெரு வேடங் கொண்டே வெல்ல நினைத்தான். 'மெய்யெலாம் நீறு பூசி' வந்து நினைத்ததே முடித்தான். இறக்கும் பொழுதும் மெய்ப்பொருள் நாயனார் 'பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்மின்' என்று கூறியதாகச் சேக்கிழார் மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் கூறியுள்ளார்.

திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து சூலை நோயால் தடுத்தாட்கொள்ளப்பட்டுத் திருவதிகைக்கு வந்து திலகவதி

யாரை வணங்கிய பொழுது அவ்வம்மையார் 'திருவாளன் திரு நீற்றை ஐஞ்செழுத்தோதிக்' கொடுத்தார். திருநீறு தன்னை யணிந்தாருடைய அகத்திருளைப் போக்கும் தகையது. திருநாவுக்கரசர் திருவதிகைத் திருவீதியில் வந்த பொழுது 'தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனி' உடையராய்க் காட்சி யளித்தார். திருத்தூங்கானை மாடத்தில் 'பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்' என்ற பதிகத்தில் 'திருவடி நீறு என்னைப் பூசு' என்றும் திருநாவுக்கரசர் வேண்டிக்கொண்டார். 'எவரேனும் தாமாக விலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால்' அவரைச் சிவனெனவே பாவித்து வணங்குக என்று தாண்டக வேந்தர் கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தரும் கூன்பாண்டியனுடைய வெப்பு நோயைத் திருநீற்றுப் பதிகம் பாடியும் திருநீறு பூசியும் தீர்த் தாரென்பது,

'ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே'

என்ற தேவாரத்தால் அறிய வருகின்றது. கூன்பாண்டியனும் திருநீற்ருல்நெடுமாறனுனன். திருப்பாசுரத்திலும்'வெந்தசாம்பல் விரையெனப் பூசியே!' என்ற இடத்தும் புகலிவேந்தர் திருநீற் றினைப் பூசுமாறு ஆணையிடுவதைக் காணலாம்.

சேரமான் பெருமாள் நாயனர் புராணத்திலும் திருநீறிட் டார் பெருமை, 'திருநீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தா தேகும்' என்ற வரலாற்றில் சிறப்பித்துப் பேசப்பட்டது.

மும்மையால் உலகாண்ட மூர்த்தி நாயனர் புராணத்தில் சைவச்செந்நெறியானது 'வேதநன்மைத் திருநீற்றுயர் நன்னெறி' என்று கூறப்பட்டுள்ளது. மூர்த்தியாரை அரசாட்சி ஏற்குமாறு கேட்டுக்கொண்ட காலத்து 'வையம் முறைசெய்வே னுகில் வயங்கு நீறே செய்யும் அபிடேகமுமாக!' எனக் கூறி

ஞர். இதனை அறியும் பொழுது மூர்த்தியார் திருநீற்றினிடத்தில் கொண்ட பேரன்பு தெற்றெனை விளங்கும்.

தொகையடியார்களிலேயும் 'முழுநீறு பூசிய முனிவர்' கூறப்பெறுகின்றூர்கள்.

மங்கையர்க்கரசியாரையும் 'பொங்கொளிவெண் திருநீறு பரப்பினவர்' என்றே சேக்கிழார் புகழ்வர்.

இங்ஙனம் திருநீற்றன்பு பெரிய புராணத்தில் பல இடங்களிலும் போற்றப் பெற்றிருத்தலைக் காணலாம்.

பூதிப்பெயர்

பூதி எனினும் விபூதி எனினும் திருநீறு எனினும் ஒன்றே. சங்ககாலச் சான்றோர்களில் வெண்பூதியார் என்பவர் ஒருவர். அவர் குறுந்தொகையில் 97, 174, 213 ஆகிய பாடல்களைப் பாடியவர். வெண்பூதியார் என்ற பெயர் திருநீற்றை அடிப் படையாகக் கொண்ட பெயரெனவே கொள்ளலாம். குறுந் தொகை 299ஆம் பாடலைப் பாடியவர் வெண்மணிப் பூதியார் என்பவர். வெண்மணி முத்து 'முத்துப் போன்ற வெண்மையான திரு நீற்றை அணிந்தவர்' என இவர் பெயருக்குப் பொருள் கூறின் பிழை என்னை?

திருநாவுக்கரசர் திருப்பெயரை இடையறாது நினைத்தும் போற்றியும் வாழ்ந்தஅந்தணரின் மேம்பட்ட அப்பூதி அடிகளார் பூதி என்ற திருநீற்றுப் பெயரையே பூண்டவராவர்.

கல்லெழுத்தில் பூதிப்பெயர்

திருச்சோற்றுத்துறை ஓதவனேசுவரர் கோயிலில் உள்ள முதல் இரசராச சோழனின் 9ஆம் ஆட்சியாண்டுக்குரிய கல் வெட்டில் (611 of vol V; A. R. No. 54 of 1895) திருப்பதியம் விண்ணப்பம் செய்யவும் பிறவற்றுக்குமாகவும் 1601 காசு பொய்கை நாடு கிழவன்* கொடுத்தான். அதில் 11 காசு உருப் பகை சொறைக்க வாலிக்கும், உருப்பகை பூதிக்கும் வழிவழி

* இத்தலைவனின் வரலாற்றை என் "இலக்கியக்கேணி"யிற் காண்க.

ஒப்படைக்கப்பட்டிருந்ததாகக் காணப்படுகிறது. இதில் காணப் படும் பூதி என்ற பெயர் விபூதியை ஒட்டியதாகக் கொள்வதில் தடையிருக்க முடியாது.

திருநீறு

இஃது ஓர் ஊர்ப்பெயராக அமைந்துள்ளது என்று மூன்ரும் குலோத்துங்க சோழனுடைய 29-ஆவது ஆட்சிக்குரிய திருப் பாசூர்க் கல்வெட்டிலிருந்து (120 of 1930) அறிய வருகின்றது. நெல்லூர், நாராயணபுரம், ஆர்க்காடு, மைலாப்பூர், திரு வொற்றியூர், பூந்தமலி, நெடும்பிறை, தமனகச்சேரி, பெருங் களூர், திருநீறு என்ற ஊர்களிலுள்ள வாணிகக் குழுவினர் தொண்டைமண்டலத்து ஈக்காட்டுக் கோட்டத்துக் கைவண்டூர் என்ற ஊரைத் திருப்பாசூர்க் கோயிலுக்கு ஒரு மதில் கட்டு வதற்குத் தேவதானமாக அளித்தனர் என்பது அக்கல்வெட்டில் கண்ட செய்தியாகும். இதனுல் திருநீறு என்பது தொண்டை மண்டலத்திலிருந்த ஓர் ஊர் என அறியலாம்.

திருநீற்றுச் சோழன்

சோழர்கள் சிறந்த சிவபக்தர்கள்; திருநீற்று நெறியில் திளைத்தவர்கள். முதலாம் இராசராச சோழன் தன்னைச் சிவபாத சேகரன் எனக் கூறிக்கொண்டானென்ருல் சோழர் தம் சிவ பக்தியை என்னென்று புகழ்வது! கி. பி. 1070-ல் சோழப் பேரரசனுக வந்த முதலாம் குலோத்துங்க சோழன் சிறந்த சிவபக்தி உடையவன். அவனுடைய சிறப்புப் பெயர்களுள் ஒன்று திருநீற்றுச் சோழன் என்பது. இது திருநீற்றுச் சோழ நல்லூர் என்ற ஊர்ப்பெயரால் அறிய வருகிறது.

திருநீற்றுச் சோழநல்லூர்

இது முதற் குலோத்துங்க சோழன் பெயரால் அமைந்த ஊராகும். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திரிசூலம் என்ற ஊரில் காணப்படும் கல்வெட்டொன்று முதற் குலோத்துங்க சோழனுடைய 39-ஆவது ஆட்சியாண்டுக்குரியது (312 of 1901; Sii Vol. No. VII of 538). முன்னலூர் என்ற ஊர்,

திரிசூலம் கோயிலுக்கு வாணராயர் என்பவருடைய வேண்டு கோட்படி தேவதானமாக அளிக்கப்பட்டது. அவ்வூர்க்குத் திருநீற்றுச் சோழநல்லூர் என்ற புதுப்பெயர் அளிக்கப்பட்டது. இச்செய்தியை உணர்த்தும் கல்வெட்டுப் பகுதி வருமாறு:-

"வாணராயர் சொல்லுகையில் இக்கோட்டத்துக் கால்வாய் நாட்டு மூந்நலூர் பிரிவுட்பட ஒருபூ விளைநிலம் முப்பது வேலி யும் கொல்லை நிலம் பதினொரு வேலியும் ஆக நிலம் நாற்பத் தொரு வேலியும் தேவதானமாக இட்டு ஊர் பழம்பேர் தவிர்த் துத் திருநீற்றுச் சோழநல்லூர் என்று நாமகரணம் பண்ணி ஊரடங் கலும் இறையிலி தேவதானமாக இட்டு வைகாசித் திருநாள் திருவெழுச்சிப்படிக்கு இவ்வூர் ஆயமும் அந்தராயத்தால் காசு நெல் உட்பட தேவற்கே கொடுத்தோமென்று வரியிலார்க்கும் வரிப் பொத்தகஞ் செய்வார்களுக்கும் சொன்னோம்"

இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கும் திருநீற்றுச் சோழன் என்ற சிறப்புப் பெயர் உண்டு எனத் தெரிய வருகிறது. அவ னுடைய 12-ஆவது ஆட்சியாண்டுக்குரிய திரு ஆனைக்கோயில் கல்வெட்டு திருநீற்றுச் சோழநல்லூரைக் குறிக்கின்றது. திரு ஆனைக்கோயில் என்பது செங்கற்பட்டு மாவட்டம் களத்தூர்க்கு அருகில் இருப்பது. வல்லநாட்டில் நென்மலி என்ற ஊரில் சில நிலங்களைக் குலோத்துங்க சோழன் திருநீற்றுச் சோழநல்லூர் என்ற புதுப்பெயரிட்டுக் கோயிலுக்கு வழங்க வேண்டுமென்று தொண்டைமான் என்பவருக்கு உத்தரவிடப்பட்டது. இக்கல் வெட்டில் (363 of 1911) அநபாய மூவேந்த வேளான் என்ற இரண்டாம் குலோத்துங்க சோழனின் அரசியல் அதிகாரியும் குறிக்கப்பெறுகிறான்.

திருநீற்றுச் சோழபுரம்

மூன்றும் குலோத்துங்க சோழனுடைய 11-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய திருக்கண்ணபுரத்துக் கல்வெட்டில் திருநீற்றுச் சோழபுரம் என்றஊர் குறிக்கப்பெறுகிறது. 'தூசகர் கருணாகர வீரர் மடம்' என்ற ஒரு மடத்தை மேற்பார்வை செய்யும் ஒருவருக்கு ஊதியமளித்தற்காகத் திருநீற்றுச் சோழபுரத்தில்

வாழும் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் இரண்டு காசு வசூலிக்க வேண்டுமென்று அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது (505 of 1922).

திருநீற்றுச் சோழமங்கலம்

இரண்டாம் இராசாதிராச சோழனுடைய 14-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய திருக்கடவூர்த் திருமயானக் கல்வெட்டில் (580 of 1906) திருநீற்றுச் சோழமங்கலம் என்றவூர் குறிக்கப் பெற்றுள்ளது.

மூன்றும் இராசராச சோழனுடைய 14-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய சிதம்பரத்துக் கல் வெட்டிலும் (280 of 1913) திருநீற்றுச் சோழமங்கலம் என்ற ஓர் ஊர் குறிக்கப்படுகிறது. அரையன் சிவந்தவனப் பெருமாளான காலிங்கராயன் என்பான் 500 பலாப்பழங்களும் 5000 மாம்பழங்களும் 5000 வாழைப் பழங்களும் ஆளுடை நாயனுர் கோயிலுக்கு ஆண்டில் பல்வேறு காலங்களில் அளித்தற் பொருட்டுத் திருநீற்றுச் சோழ மங்கலத்தில் இருந்த நிலத்தை அளித்தான். ஊர்ச் சபையார் அந்நிலத்துக்கு உரிய வரியைச் செலுத்துவதாக ஏற்றுக்கொண்டனர்.

திருநீற்றுச் சோழன் திருமடை விளாகம்

செங்கற்பட்டு மாவட்டத்தில் தென்னேரி என்ற ஓர் ஊர் உள்ளது. முன்னுளில் அவ்வூர் 'திரையனேரி' என்று வழங்கப் பெற்றது. அவ்வூரில் இரண்டு கோயில்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று அநந்தேஸ்வரம் என்பது (இந்நாளில் ஆபத் சகாயர் கோயில் என்று அது வழங்கப் பெறும்). அக் கோயிலுக்கு மூன்றும் குலோத்துங்க சோழனுடைய ஐந்தாவது ஆட்சியாண்டில் சிறிது நிலம் அளிக்கப்பெற்றது. அந்நிலத் துக்குத் திருநீற்றுச்சோழன் திருமடை விளாகம் என்ற பெயர் அளிக் கப்பட்டது (196 of 1901; Sii vol VII No 407).

திருநீற்று வீரமாகதச் சோழன்

பிற்காலச் சோழர்களோடு மாறுபட்டவர்களுள் ஒருவன்

கோப்பெருஞ்சிங்கன் எனப்பெறுவான். அவனுடைய 31-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய கல்வெட்டு (489 of 1902) திருவண்ணு மலையில் இருக்கிறது. கோப்பெருஞ் சிங்கன் காலத்தில் வாழ்ந்த ஒருதலைவன் வாணகோவரையன் தாயினும் நல்ல பெருமாள் திருநீற்று வீரமாகதச் சோழன் என்ற பெயருடை யவன். அவன் திருவண்ணுமலைக் கோயிலில் தன் பெயரால் திருநீற்று வீரமாகதச் சோழச்சந்தி என்ற காலபூசை நடத்து வதற்கும் திருப்பணிக்குமாகச் சிறிது பொருள் அறஞ்செய் தான். விருத்தாசலம் தாலுகா தொழுதூரில் கண்ட கல்வெட் டினின்று (399 of 1913) திருநீற்று வீரமாகதச் சோழப் பேரேரி என்று ஒரு ஏரி இருந்ததாகவும் அறிய வருகிறது.

நீறணிந்தான்

தொண்டை மண்டலத்தில் வெண்குன்றக் கோட்டத்து அத்தி என்ற ஊரில் அகஸ்தீஸ்வரர் கோயிலில் இரண்டாம் இராசாதிராசனுடைய பத்தாவது ஆட்சியாண்டுக்குரிய கல்வெட்டுள்ளது (297 of 1912). அவ்வூரில் உள்ள திரு அகஸ்தீஸ்வர முடையார்க்குச் சோழமண்டலத்து உய்யக் கொண்டார் வளநாட்டுப் பனங்குடி என்னும் ஊரவனுகிய சேதிராயன் என்பான் 32 பசுக்களையும் ஒரு ரிஷபத்தையும் அளித்தான். இச்சேதியராயனுக்கு நீறணிந்தான் என்ற ஒரு சிறப்புப் பெயர் இருந்தது என்று அக்கல் வெட்டினின்று அறியவருகிறது.

திருநீறிட்டான் திருமடம்

கோயம்புத்தூர் ஜில்லா குமாரமங்கலம் என்ற ஊரில் வெங்கடேசப்பெருமாள் கோவிலில் வீரராசேந்திர தேவர் என்ற ஒரு அரசனது கல்வெட்டுள்ளது (107 of 1909). வைகாவி நாட்டு இரட்டையன்பாடி ஊரவன் கரைவழி நாட்டுக் கொழுமம் என்ற ஊரில் இருந்த முட்டிரட்டீசுவரம் உடையார் கோயிலுக்கருகில் இருந்த திருநீறிட்டான் திருமடத்துத் தவசி ஒருவருக்குச் சிறிது நிலதானம் செய்தான் என்று அதில் கூறப்பட்டுள்ளது. இதனுல், ஒரு திருமடத்துக்குத் திருநீற்றுப்

பெயர் அமைந்திருந்தது என்று அறியலாம்.

திருநீறுபேணியணிவான்

பிரான் மலையிலுள்ள, சோணாடு கொண்ட சுந்தரபாண்டியனுடைய மூன்றாவது ஆட்சியாண்டுக் கல்லெழுத்தில் (429 of vol VIII; 142 A of 1903) திருநீறுபேணியணிவான் என்பான் பெயர் அறியக்கிடக்கிறது. அக்கல்வெட்டுப்பகுதி வருமாறு:—

"திருநட்டப் பெருமாள் பிள்ளைகளில் எதிரில்லாப் பெருமாள் ஐயமுடைய பெருமாளான திருநீறுபேணி அணிவானேன் சந்திராதித்தவல் செல்வதாகத் திருநுந்தா விளக்கு ஒன்றனுக்கு விட்ட ஆடு ஐம்பது."

திருநீறுபரப்பினார்

பிரான்மலையில் அரசன் பெயர் குறிக்கப்படாத கல்வெட்டொன்று உள்ளது (442 of vol VIII; 154 of 1903). அஃது திருக்கொடுங்குன்றம் அழகிய சிற்றம்பலமுடைய நாயனார்க்குத் திருப்படி மாற்றுக்கும், திருப்பணிக்கும், திருப்பரிவட்டம், திருமேற்புச்சு மற்றுமுள்ள நிபந்தனைகளுக்கும் ஆகச் சிலவரிகளைக் கோயிலாரே வசூலித்துக் கொள்ளத் திசை ஆயிரத்தைஞ் ஞூற்றுவரும் பதினெண் விஷையத்தாரும் உத்தரவு கொடுத்தசெய்தி கூறுவது. இத்தன்ம சாசனத்தில் கையெழுத்திட்ட பதினெண் விஷையத்தாருள் ஒருவர்,*நாட்டார் பள்ளியுடையார் திருநீறுபரப்பினார் என்பவராவர்.

முடிவுரை

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் அஞ்செழுத்தெங் கே"

என்ற வண்ணம் திருநீறு பரப்பியோர் சைவசமயகுரவரும் பிற நாயன்மார்களும் ஆவர். அன்னோர்க்குப்பின் இந்நாட்டில்

---

* யான் வெளியிட்ட "இலக்கியக்கேணி" என்ற நூலுள் "ஆணை நமதே" என்ற கட்டுரை காண்க.

நிலவிய சோழப் பேரரசர்களும் திருநீற்று நெறியைப் பரப்பினோர் ஆவர். திருநீற்றுச்சோழன் என்றும், அப்பெயரை நினைவு கூரும் நிலையில் ஊர்களுக்கு அப்பெயரை அமைத்தனர் என்றும் அறிவதிலிருந்து, திருநீற்றினிடத்து அன்னோர் மிக்க பற்றுடையவராய் வாழ்ந்தனர் என்பது தெளிவாகப் போதரும். திருநீறு பேணி அணிவான், திருநீறு பரப்பினன் என்ற பெயர் உடையவர்கள், பெயரளவில் அமையாது, திருநீற்றைப் பரப்பியவராகவே இருந்தனர்! அன்னோர் போலத் திருநீற்றன்பு பாதுகாப்பதே நம்மனோர் கடமையாகும். "நீறில்லா நெற்றிபாழ்" என்றார் ஔவைமூதாட்டியாரும் திருநீறு இடாதவர்களை அஞ்சத் தக்கவர்களாகவே மாணிக்கவாசகரும் கருதினார். அங்ஙனம் அஞ்சத்தக்க பொருளாக இல்லாமல் வெளியநீறுடுமேனியராக—தோளுலா நீற்றராக—வாழ்வோமாக!

பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன்
தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சு மாறே, (அச்சப்பத்து)

"முப்பால் ஒளி-திங்கள் இதழ்"
(திருக்குறள் மணி விளக்கவுரை)
ஆசிரியர் - பன்மொழிப்புலவர்
கா. அப்பாத்துரை, எம். ஏ., எல். டி.,
1966 தைப் பொங்கல் நாள் முதல் ஆரம்பம்

மாத இதழ்	1-25 ந. பை.
ஆண்டுச் சந்தா	12-00 ,,
ஆயுள் உறுப்பினர்	101-00 ,,

இடைக்குமிடம்:— "அலமேலு நிலையம்"
8. அப்பாத்துரையார் தெரு: சென்னை-18

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் I . இதழ் 2-ன் தொடர்ச்சி]

III

SUNDARAMURTI SWAMI

(Abbreviated as SUNDARAR)

To English ears the metre of the next two verses, which are common favourites, has a curious sound. It is a close reproduction of the Tamil, so close that the tune of the Tamil hymn could be sung to the English words.

66. பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுண்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே.

66. Golden art Thou in Thy form, girt around with the
fierce tiger's skin,
Fair shines Thy tangle of hair, crowned with blooms
from the kondai's bright tree,
Sov'reign, great jewel art Thou, the red ruby of
Malapadi,
Mother, on Thee, none but Thee, can my heart
evermore fixed be.

(To be continued)

Reproduced with the kind permission of Oxford University Press, Calcutta.

(N.B. Copies available for sale at the above Press.)

அழகிய சிற்றம்பலம்

திரு சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், B. A., B. L.,
கோயம்புத்தூர்.

இடம்:

கோவை நகருக்கு மேற்கே நொய்யல் என்ற காஞ்சிமா நதியின் தெற்குக் கரையில் மூன்று கல் தொலைவில் உள்ளது பேரூர் என்ற வைப்புத்தலம். அது சுந்தரமூர்த்திகளால் ஊர்த் தொகையில், 'பேருருறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே' என்றும், கோயில் திருப்பதிகத்தில் 'மீ கொங்கில் அணி காஞ்சிவாய்ப் பேரூர்ப் பெம்மானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்ரும் அன்றே' என்றும் சிறப்பிக்கப் பெற்ற திருத்தலம். பேரூரில் பல திருத்தளிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று அழகிய சிற்றம்பலம். இந்தக் கோயில் பேரூர்ப் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. பெரிய கோயிலாகிய பட்டீசுவரர் கோயிலுக்கு வடகிழக்கு மூலையில் ஒரு பர்லாங்கு தொலைவில் உள்ள ஒரு தனிக்கோயில் அது ஆகும். தெற்கணும்பி சங்கரையன் மகன் மாதையன் என்பவனுல் அகழப்பெற்ற திருக்குளத்திற்கு வடகிழக்கில், காலவேச்சரம் செல்லும் வழியில் சிறிது கிழக்கே தள்ளி இருக்கிறது. கோயிலில் தற்போதுள்ளவை கருவறையும் சுற்றுலையும் மட்டுமே. கருவறையைச் சுற்றிலும் கல்வெட்டுக்கள் உள்ளதாலும், அவைகள் கொங்குச் சோழர்கள் காலத்தவையாகையாலும், கோயில் ஏழு எட்டு நூற்ருண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டதாயிருக்கவேண்டும். கோயிலில் தற்காலத்தில் வழங்கப்படும் பெயர் அழகிய சிற்றம்பலம் என்பதாகும். இப்பெயர் கச்சியப்பர் பேரூர்ப் புராணம் பாடுவதற்கு முன்னிருந்தே, அதாவது மூன்று நூற்ருண்டுகளுக்கு முன்னிருந்தே இருந்திருக்கவேண்டும். சிற்றம்பலம் என்று இருக்

1966 பிப்ரவரி மாத 'திருக்கோயில்' பத்திரிகையில் வெளிவந்துள்ள இக்கட்டுரை ஆசிரியர் அனுமதியுடன் பிரசுரிக்கப்படுகிறது.

கிறபடியால் நடராசப் பெருமான் சன்னிதி இங்கே இருந்திருக்க வேண்டும். எப்போது எடுபட்டதோ அல்லது கட்டப்பட வில்லையோ அறியோம். அதைப் பற்றிக் கர்ண பரம்பரையும் இல்லை.

ஐதீகம்:

அழகிய சிற்றம்பலத்தைப் பற்றிக் கச்சியப்ப முனிவர் பேரூர்ப் புராணத்தில் அரிய செய்யுள் நடையில் ஒரு படலமே இயற்றியிருக்கிறார். அப்படலமே 200 செய்யுள்களைக் கொண்டது. அதில் இந்தத் திருக்கோயில் தோன்றிய செய்தி கூறப் பட்டுள்ளது.

சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பேரூரை அடுத்து வணங்கிச் சென்று தில்லைச் சிற்றம்பலத்தே நடராசப் பெருமானைப் பாடிய திருப்பதிகத்தில் 'பேரூர்ப் பெருமானைப் பெற்றோம்' என்று அருளிச் செய்த தேவாரத்தைத் தில்லை வாழ் அந்தணர்கள் கேட்டு, நாயனாரை நோக்கி 'இத்தில்லைத்தலம் போல் இவ்வுல கத்தில் ஒரு தலம் உண்டோ?' என வினவியதற்கு 'இக்கனக சபையில் தாண்டவம் செய்வது போலத் திருப்பேரூர் வெள்ளி யம்பலத்தில் சிவபெருமான் திருநடம் செய்தருளுகின்றார். இத் தலத்தில் முத்தி தருவதன்றித் தர்மார்த்த காமங்கள் தருவ தில்லை!' என்று நாயனார் நவின்றனர். உடனே தில்லைவாழ் அந்தணர்கள் திருப்பேரூரை அடைந்து காஞ்சிமா நதியில் குளித்துத் திருமேனியிலே சிவ சின்னங்களாகிய திருநீறும் கண்டிகையும் பூண்டு இறைவனையும் இறைவியையும் வணங்கி, அரசம்பலவாணரை வணங்கி மற்றைய நாள் காலவ ஈச்சரத் திற்கு அக்கினிதிக்கிலே சிவலிங்கம் தாபித்துப் பூசித்து அங்கே வசித்தார்கள். அப்போது வெள்ளியம்பலத்திலே சிவபெருமான் திருநடம் செய்ய அதனைத் தில்லைவாழ் அந்தணர்கள் தரிசித்து இன்புற்றனர். ஆன்மாவும் சிவமும் அத்துவிதமாய் மன மகிழ்ந்த அவசரமாய் நின்று துதித்து விடை பெற்றுச் சோழ நாடு சென்று, சிதம்பரம் அடைந்து பண்டைக்காலம் போல் வாழ்ந்திருந்தனர். அவ்வந்தணர் தோற்றுவித்துப் பூசித்த ஆலயத்திற்கே அழகிய திருச்சிற்றம்பலம் என்று பெயர் வழங்

கியது. இறைவன் அழகிய திருச்சிற்றம்பல முடையார் எனப் பட்டனர்.

கல்வெட்டுச் சான்றுகள்:

கர்ப்பக் கிருகத்தின் முன்புறங்களிலும் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளை ஆராய்ந்தால் கோயிலின் சரிதப் பகுதிகள் பலவற்றை நன்கு அறியலாம். பேரூர்ப் புராணத் தின்படி இக்கோயில் சுந்தரமூர்த்திகள் பேரூருக்கு வந்து விட்டுப் போனவுடன் தில்லைவாழ் அந்தணர்கள் இங்கு வந்து இதனைத் தாபித்தார்கள் என்பதாம். அதாவது 9-ஆம் நூற் ருண்டில் (1000 ஆண்டுகளுக்கு முன்) அப்போதுள்ள மூலத் தானம் மட்டும் ஏற்பட்டிருக்கும். பிறகு ஆலயம் ஏற்பட்டது. கொங்குச் சோழர் காலம் என்று கல்வெட்டுச் சான்றுகள் கூறு கின்றன. கல்வெட்டுக்கள் 1000 முதல் 1200 ஆண்டளவில் பரந்திருப்பதினுல் மன்னர்கள் இந்த ஸ்தாபிதத்தை அங்கீகரித் துக் கோயில் எழுப்பி உள்ளார்கள். தானதருமங்களும் செய் திருக்கிருர்கள் பொதுவாக இற்றைக்கு 8 அல்லது 9 நூற் ருண்டுகளுக்கு முன்பு இவைகள் ஆகியிருக்கலாம்.

இந்தக் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள் 1962-இல் அரசாங்கத்தாரால் படி எடுக்கப்பட்டன. விட்டுப்போன கல்வெட்டுக்கள் 4 கோயில்களில் இருந்தன. அவைகளில் ஒன்று அழகிய சிற்றம்பலம். அவைகளில் 15 தமிழிலும், 3 வட்டெழுத்திலும் உள்ளன. அரசர் வீரராஜேந்திரன், விக்கிரமன் என்பார்கள். வீரராஜேந்திரன் 1209—1252 வரையில் ஆண்ட ஒரு புகழ் பெற்ற அரசன். அவனுக்கு முன்னும் பின்னும் விக்கிரமன் என்ற பெயரில் நான்கு மன்னர் கள் இருந்தார்கள். முதல் விக்கிரமன் 1004-இல் பட்டம் பெற்றவன். ஆகவே பொதுவாக அக்காலத்தை நிச்சயிக் கலாம். இக்கல்வெட்டுக்களின்படி இக்கோயில் இறைவனுடைய திருப்பெயர் 'இடங்கை நாயகம் உடையார்' என்பது. இப் பெயர்தான் கோயில் கட்டப்பட்டபோது வழங்கியதென்க. 'அழகிய சிற்றம்பலம்' என்பது 200 ஆண்டளவில் ஏற்பட்ட தாக இருக்கலாம்.

கல்வெட்டுக்களில் சில அரிய செய்திகளைக் காண்கிறோம். ஒரு கோயில் கட்டுகையில் முழுப்பொறுப்பையும் ஒரே ஆள் எடுத்துக்கொள்ளாமல், பலபேர் சேர்ந்து ஒவ்வொரு பகுதியை எடுத்துக் கட்டினதாகத் தெரிகிறது. இதுமக்களின் ஒத்துழைப் பைக் காட்டுகிறது. உதாரணமாக, வாயில், கதவு, நிலவு விட்டம் முதலியவைகளை வெவ்வேறு ஆட்கள் தந்துதவியிருக் கிறார்கள்.

விக்கிரமசோழன் காலத்தில் இடங்கை நாயக முடையார் கோயில் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். கட்டிடம் கட்டினது, ஆராதனைக்கு நெல்தானம் தந்தது, எல்லாம் அவ்வரசன் காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன.

இக்கோயில் மூர்த்திகளில் இடங்கை நாயகம் உடையார் என்ற பெயரோடு வேத நாயகம் என்ற பெயரும் இருக்கக் காண்கிறோம். இவ்விருமூர்த்திகளும் எவை எவை என்று தெரியவில்லை.

இடங்கை நாயகம் உடையார் என்ற பெயருக்குப் பொருள் விளங்கவில்லை. வடமொழிப் பெயரும் தெரியவில்லை. முக் காலத்தில் மக்களில் இடங்கை வலங்கை என்ற இருவகுப்புக்கள் இருந்தன. இவ்விரு கட்சிகளுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டதுண்டு. இடங்கை வகுப்பார் வெற்றியடைந்தபோது வெற்றிச் சின்னமாக இக்கோயிலைக் கட்டி அப்பெயரையே இறைவனுக்கு இட்டிருக்கலாம்.

மேலும் இடங்கை நாயகம் உடையார் கோயிலுக்கு ஆராதனைக்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு நாட் செலவைக் கொடுப்பதற்கு ஒரு தொகுதியார் பொறுப்பு ஏற்றுக்கொண் டார்கள். அன்னார் பெயர்கள் வீரசமுக்கட்டார், அம்மங்காரர் சேனாதிபதிகள் என்று குறித்திருக்கக் காண்கிறோம். ஒவ்வொரு நாட் செலவை ஒவ்வொரு சமூகத்தினர் ஏற்றுக் கொள்ளும் வழக்கம் அந்நாளிலேயே இருந்தது என்க.

மூவர்க்கு மூத்தவன்

'பாலகவி' வயிநாகரம்,
திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
(தத்புருஷ தேசிகர்) தேவகோட்டை.

[மலர் 17, இதழ் 2-ன் தொடர்ச்சி]

ஞானுனுபூதிச் செல்வராகிய திருமூலதேவ நாயனுர் தமது திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்து ஏழாவது செய்யுளாக

"முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்று மில்லாத் தலைமகன்
தன்னையப் பாவெனி லப்பனு மாயுளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே"

என்னுந் திருப்பாடலை அருளிச் செய்து இதன் முதல் வரியில் இதுவரை சிந்தனைக்குக் கொண்டுவந்த உண்மைகள் அனைத்தையும் பொதிய வைத்திருக்கிறுர்.

இத்திருப்பாடலில் "முன்னை" என்னும் சொல் பேரூழியின் பின்னர் நிகழும் சிருட்டிக் காலத்தைக் குறிக்கின்றது. சுத்தம், அசுத்தம், பிரகிருதி ஆகிய மூன்று மாயை களிலுமுள்ள புவனங்கள் அனைத்தும் ஒடுங்கி மீண்டும் தோன்றுவது, அந்தப் படைப்பொன்றில் மட்டுந்தான் ஆதலினுலும் அவ்வேளையிலேயே பிரமன் விஷ்ணு உருத்திரனுதிய காரணேசுவர வடிவங் கொண்டு சிவபரம்பொருள் தோன்றுவாராதலினுலும் "முன்னை" என்பது அந்த ஆதிகாலத்தை உணர்த்துவதெனை அறிந்து கொள்ள வேண்டும்.

மேலும், காரியேசுவரராகிய பிரமன் விஷ்ணு உருத்திரன் ஆதியோரைத் தம்முள் ஒப்பானவரென்று எந்த நூல்களிலும்

கூறப்பெறவில்லை யாதலால் இங்கே கூறப்பெற்ற ஒப்பாயுள்ள மூவர் காரணேசுவரரே என்பது தெள்ளத்தெளிய விளங்குவதாகும். "மூத்தவன்" என்ற சொல்லிலுள்ள மூப்பு, முதன்மையைக் குறிக்க வந்தது.

சுத்த மாயையின் விரிவுகளாகிய சிவதத்துவங்கள் ஐந்தனுள் சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியமாகிய தத்துவங்களை நிலைக்களங்களாகக் கொண்டு உயிர்களுக்கு அருள் புரிந்து வருகின்ற உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய சிவபேத மூர்த்தங்கள் உருவத்திருமேனியும் அருவுருவத் திருமேனியும் உடையனவாய் விளங்குவனவாகும். இவ்விரு வகைத் திருமேனிகளுக்கும் மூலமான அருவத் திருமேனிகள் விந்து–நாதங்களை நிலைக்களங்களாகக் கொண்டுள்ள சத்தியினுடையதும் சிவத்தினுடையதுமாம். இங்ஙனம் அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூவகைப்பட்ட வடிவம் உடைமையால் ஒப்புமையுள்ள தடத்த மூர்த்திகளுக்கு முதன்மையாய், அகண்டாகார சச்சிதானந்த சொரூப சிவம் இருக்கிறதென்பதும் இத்திருப்பாடலின் முதல் வரியால் அறியக் கிடக்கின்றது.

சிவபெருமானுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்பதை இவ்வாசிரியர் "சிவனொடொக்குந்தெய்வம்" என்று தொடங்கும் திருப்பாடலில் தெளிவு படுத்தியிருக்கின்றார். அத்திருப்பாடலின் விளக்கம், நமது திருக்கோயில் இதழில் முன்னர் வெளிவந்திருக்கிறது. அந்தத் திருப்பாடலில் "ஒப்பற்றவன்" என்பதை வலியுறுத்திய ஆசிரியர் இந்தத் திருப்பாடலின் இரண்டாவது வரியில் அதனோடு "அவனே தலைவன்" என்பதையும் உறுதிப்படுத்துகிறார்.

ஒப்பின்மை ஏகதேசத்தில் அமைவதும் முழுவதிலும் அமைவதுமென இரண்டு திறப்படும். ஒரு துறையில் பிறரோடு ஒப்பில்லாதவனுயிருக்கும் ஒருவன், மற்றைத் துறைகளில் பலரோடு ஒப்பவைத்துக் காணத்தக்கவனுயிருப்பதுமுண்டு. எனவே ஒப்பின்மை யொன்றைச் சொல்வதால் மட்டும் சிவபெருமானுக்குத் தலைமைத் தன்மை சித்தித்து

விடாதென்பதை நினைவு கொண்டு" தன்னையொப்பா யொன்றும் இல்லாத் தலைமகன்" என்று அருளிச் செய்து அவனது முழுமுதல் தன்மையை அவனுக்கு ஒப்பாக எந்தப் பொருளும் இல்லாமையினாலும், அப்பொருள்களுக்கெல்லாம் அவன் தலைவனாய் விளங்குதலினாலும் நமக்கு அறிவுறுத்துவாராயினார். இங்கே "ஒன்றும்" என்று குறிக்கப்பெற்றது, 'அவனவளது வென்னும் முத்திறப்பட்ட இவற்றுள் ஒரு பொருளும்' என்னும் பொருளையுடையது.

சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெறுதற்குரிய சாதன முறைகள் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று சொல்லப் பெறுவன. சரியை என்பது இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாவாகிய தன்னை அடிமையாகவும் கொண்டு புறத்தே வழிபாடு செய்வது. கிரியை என்பது இறைவனைத் தந்தையாகவும் தன்னை மைந்தனாகவும் கொண்டு அகத்தும் புறத்தும் வழிபடுவது. யோகம் என்பது, இறைவன் தன்னோடு தோழமைத் தகுதியிற் பொருந்த அகத்தே வழிபாடு செய்வது. ஞானம் என்பது இறைவன் தன்னுடன் வேறற நிற்க அகமும் புறமும் கடந்து வழிபாடு செய்வது.

இவற்றுள் சரியையாகிய புறவழிபாடு சைவ சமயத்திற் பிறந்த அனைவராலும் மேற்கொள்ளப்பெற வேண்டுவது. சைவ சமயத்திற் பிறக்கும்படி செய்த புண்ணியமொன்றே, சமய தீட்சை பெற்றுக் கொண்டு அதன் வழிச் சரியை நெறியை மேற்கொள்ளுவதற்குரிய பக்குவத்தைத் தந்து விடும். மேற் கிரியை யோக ஞானங்களாகிய மூன்றும் அவ்வவற்றிற்கு, முந்திய நெறிகளில் நின்றொழுகிப் பெற்ற முற்றிய பக்குவங் களால் பெற வேண்டுவன. இவற்றில் முடிந்ததாகிய ஞானத் தின் பயன் முத்தி.

சைவ சமயிகள் அனைவருக்கும் பொதுவாகிய சரியை நெறி யிலிருந்து மேலேறி, விசேட தீட்சை பெற்றுக் கிரியை நெறியை மேற்கொள்ளுவது சிறப்பாக ஒரு சிலருக்கே அமைவதும், அதில் நின்றும் மேலேறி யோக – ஞான நெறிகளில் தலைப்படுவது மிகச் சிலருக்கே அமைவதுமாகும். உயிர்களுக்கு வேண்டிய

உதவிகளை எல்லோருக்கும் ஒப்ப ஏற்றத் தாழ்வில்லாது செய்து வருகின்ற இறைவனிடம், தமக்கெனத் தனித்த உதவிகளைப் பெற விரும்புவோர் அவனைத் தந்தையாக வைத்து வழிபடும் தகுதியுடையவராதல் வேண்டும். இதனை,

"எந்தை யீசனெம் பெருமான் ஏறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லால் சென்றுகை கூடுவதன்றால்"

என்று முத்துச் சிவிகையூரும் வித்தகர் உணர்த்தியருளுகின்றார்.

எவ்வுயிர்க்கும் தந்தையாயிருக்கும் சிவபெருமானைத் தமக்குத் தந்தையென்று காண்கின்ற தவமுடையாரை, அவன் மைந்தராக ஏற்று வாழ்வருளும் திறம் சிவஞான போத எட்டாம் சூத்திரத்தில் உணர்த்தப் பெற்றுள்ளது. இதனையே இவ்வாசிரியர்,

"தன்னையப் பாவெனி லப்பனு மாயுளன்"

என்று அருளியிருக்கின்றார்.

"அப்பனும்"என்பதிலுள்ள உம்மை எச்சவும்மையாய், மேல் வருகின்ற தோழமை, ஒற்றுமை ஆகிய தொடர்புகளையும், முன்னேயிருந்த தலைமைத் தொடர்பையும் குறித்துக் கொண்டிருக்கிறது.

இங்ஙனம் மூத்தவனாய்த், தலைமகனாய், அப்பனுமாய் உள்ள ஆண்டவன் எங்கே உள்ளான் என்பதை

"பொன்னையொப் பாகின்ற போதகத் தானே"

என்ற இறுதி வரியில் விளக்கியருளினார் ஆசிரியர்.

"பத்ம கோச ப்ரதீகாசம் தஸ்ய மத்யே வன்னி சிகா
தஸ்யா சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித".

"இதயம் தாமரை முகையை ஒத்தது. அதன் மத்தியில் அக்கினிசிகை இருக்கின்றது. அச்சிகையின் மத்தியில் பரமான்மாவாகிய சிவபெருமான் இருக்கிறார்". என்று தைத்திரிய ஆரண்யக உபநிடதம் கூறுகின்றது.

பொன் வண்ணமாகிய இதய கமலத்தில் எப்பொழுதும் தங்கியிருப்பது இறைவன் இயல்பு என்பதை இதனால் அறியலாம்.

நலம் பெருகுக.

தாயுமானவரின் — பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

27

The water drop, which rests on the lotus leaf, though appears to be in unison with it, virtually it is not so. This aspect of the water drop is always compared to the Jivanmukthas. They are living with the human body; but they are above the level of mortals. They are doing this and that as other worldlings, but their aim has already been attained. Nothing stands worthy of Comparison to them. This is told in the following couplet.

அப்பும் உப்பும் போன்ற ஐக்ய பரானந்தர்க்கு
ஒப்புவமை சொல்லப் படுமோ பராபரமே!

(பொ—ரை) நீருடன் கலந்த உப்புப் போன்று ஆண்டவனின் திருவடிகளில் கலந்துவிட்ட பெரியோர்களை உவமித்துச் சொல்லமுடியுமோ!

Oh! Lord Supreme! Is there any comparison to those who have united themselves inseparably to the feet of God, as the salt dissolved in the water!

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Art's College, Arulnandi Nagar.

மந்திரமும் யந்திரமும்

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
Madras-31.

சிவம் சூக்குமாதீதப் பொருள். வடிவற்றது. "தன்னுருவம் யாவர்க்கும் தாக்காதான் காண்" என்றார் அப்பர்.

மனம் உருவுடைய பொருள்களையே உணரவல்லது. உருவமில்லா ஒன்றை உருவுடைய பொருள்களையே உணர வல்ல மனத்தால் எவ்வாறு அறிந்து கொள்ளுதலாகும்?

இந்த ' ஐயப்பாடு கீதாசாரியருக்கே எழுகின்றது. "அவ்யக்தமான தொன்றை தியானிப்பாம் என்று சொல்வோர் முன்னே, ஒரு பெரும் பிரச்னை எழுந்து நிற்கின்றது. ஊனுடம் புள்ளே சிறை செய்யப்பட்ட எதுவும் உருவங்கடந்த தொன்றை உணர்ந்துகொள்ளலாகாதே" என்கிறார். [பகவத் கீதை 12-5 (559)].

ஆயினும் மனம் சூக்குமமானது அந்த சூக்குமத்துக்கும் சூக்குமாதீதத்துக்கும் பாலம் சமைப்பதே சமயம் என்பது ஆகவேதான், அதற்கு நெறி என்றும், மார்க்கம் என்றும் பெயர்களுள்ளன. யோகம் என்றாலும் இணைப்பு என்றே பொருள்.

சூக்குமமான மனமுனையிலிருந்தே அதிசூக்குமமான எல்லைக்கரைக்குப் பாலம்போடவேண்டும். அந்த சூக்கும மனமுனைக்குத் தூலநிலத்திலிருந்து பாதை சமைத்தல் வேண்டும். இவ்வாறு, படிப்படியாக, தூலத்திலிருந்து சூக்குமத்துக்கும், சூக்குமத்திலிருந்து சூக்குமாதீதத்துக்கும் தொடர்பு கொள்ளலாகும்.

மனம் இருவகையான படைப்பாற்றலைக் கொண்டது. ஒன்று ஒலிப்படைப்பு; மற்றது ஒளிப்படைப்பு. ஒலிப்படைப்பே மந்திரம் எனப்படும். ஒளிப்படைப்பே வரிவடிவான யந்திரம் எனப்படும்.

ஒலியும் ஒளியும் தூலமானவை ஆயினும், அவற்றிற்கு சூக்கும நிலைகளும் உண்டு. சூக்குமமான ஒலி நிலையே மந்திரம். சூக்குமமான ஒளி நிலையே யந்திரம். பின் அவைத் தூலவடிவுகளும் பெறுகின்றன. அப்பொழுது மந்திரம் உச்சரிக்கப்படுகின்றது. யந்திரம் வரிவடிவாய் எழுதப் பெறுகின்றது.

சூக்குமமான ஒலி எழுநிலை "ஓம்" எனப்படும். இந்த சூக்கும நிலையிலே அது வெளி வராது, மனத்துள்ளேயே ஒலிக்கப்படுகின்றது. வெளிப்படையாக ஜபிக்கப்பெறாததால் அதற்கு அஜபை (அசபை) மந்திரம் என்று பெயர்.

இதன் ஆதி 'அ' என்னும் ஒலி. இதனை திருமூலர் ஓரெழுத்து மந்திரம் என்கின்றார். இதுதான் அடிப்படைப் படைப்பொலி. "ஆதியிலே வாக்கு எழுந்தது" என்று விவிலியப்பழைய வேதத்தில் குறிப்பிடுவது இதனையே.

அகரத்திலே எழுந்த படைப்பு உலகிலே உரிய காலம் தங்கல் வேண்டும். அந்தநிலையில் எழும் ஒலி "உ" என்பது. 'உ'காரம் நிலைபேற்றை அல்லது காத்தலைச் செய்கின்றது.

தோற்றமொன்றே உலகமாயில்லை. தோன்றியன வெல்லாம் நின்று விடுவனவுமல்ல. யாவும் அழிந்தே படுகின்றன. அடங்குகின்றன. இந்த அடக்கத்தைக் குறிக்கும் ஒலி "ம" எனப்படும்.

தோற்றம், திதி, ஒடுக்கம் ஆயின. இவற்றை நாளும் எல்லாப் பொருள்களிடத்தும் நிகழ்வதைக் காணுகின்றோம். அதற்குப்பின் என்னாகிறது? யாரறிவார்? அந்த அறியா நிலையை ஒரு புள்ளியால் குறித்தனர். அதை விந்து என்றும் கூறினர்.

படைத்தல், நிலைவித்தல், ஒடுக்கல், பின்னே வரும் அறிய வொண்ணா நிலை, இவை நீக்கமற பிண்டமாகிய மனத்தில்

நிகழ்கின்றன. அண்டமான இறைவன் பெருமனத்திலும் நிகழ்கின்றன. அண்டத்திலுள்ளன பிண்டத்திலுமுண்டு.

இவை முறையே அ, உ, ம, புள்ளி என்ற ஒலிக்குறியீட்டுகளால் விளக்கப்படுகின்றன. இவை ஒன்றுகூடி, அ+உ= ஒ+ம+புள்ளி=ஓம் என்ற ஒலியாகத் திரள்கின்றன. இதைத் திருமூலர் நன்ருக விளக்குகின்ருர்.

ஒரெழுத்தாலே உலகெங்குந்தாகுகி
ஈரெழுத்தாலே இசைந்தங்கிருவராய்
மூவெழுத்தாலே முளைக்கின்ற சோதியை
மாவெழுத்தாலே மயக்கமே உற்றதே. (*தந்திரம்–4. பாட்டு–2.*)

தத்தாத்திரேய தந்திரசம்ஹிதை என்ற நூலிலும் இது விளக்கம் பெறுகிறது.

"அ, உ, ம என்று மூன்று எழுத்துக்களும், தோற்றம்; நிலைபேறு, அழிவு–என்ற மூன்று தொழில் இயல்புகளைக் குறிக்கின்றன. பின்னே வருவது அரை எழுத்து. அது குறிகுணமில்லாத தொன்றைக் குறிக்க எழுந்தது. யோகிகளே அதனை உணரவல்லார்" என்கிருர் (569) இந்த "அரை" எழுத்தையே திருமூலர் "மா" எழுத்து என்ருர்; "தனி" எழுத்துமென்ருர் பிறிதோரிடத்தில்.

சுவாமி அரிகரானந்த சரஸ்வதி என்ற கரபாத்திரி சுவாமிகள் "சித்தாந்தம்" எனப்படும் இந்திப் பத்திரிகையில் "ஸ்ரீ பகவதி தத்வம்" என்ற தலைப்பில் எழுதுகையில், "இந்த அரை எழுத்தே யாவற்றுக்கும் அடிப்படை; ஆனுல் அது நேர் கோடாக, அதாவது வெளிப்படையாக (கூடஸ்தமாக) இல்லை. மனவாக்குக்கு அப்பாற்பட்டது" என்று குறிப்பிடுகிருர்.

'ஓம்' எனினும் 'ஆம்' எனினும் ஒன்றே. திருமூலர் 'ஆம்' என்றே குறிப்பிடுகிருர், பின்வரும் பாட்டில்

ஆமே பொன்னம்பலம் அற்புதம் ஆனந்தம்
ஆமே திருக்கூத்தனவரத தாண்டவம்
ஆமே பிரளயமாகும் அத்தாண்டவம்
ஆமே சங்காரத்து அருந்தாண்டவங்களே.

(*தந்திரம்–4. பாட்டு–4.*)

'ஓம்', 'ஆம்' என்ற ஒலிகளுக்கு, "இணங்குகின்றேன்"; "இசைகின்றேன்"; "வணங்குகின்றேன்" என்பன பொருளாகும். சாந்தோக்கிய உபநிடதத்தில் "இந்த ஒலிக்கு உண்மைப் பொருள் இசைவு என்பதே ஆகும். எப்பொழுதெல்லாம் ஒருவன் தன் இசைவை அறிவிக்கிருனே, அப்பொழுதெல்லாம் 'ஆம்' (ஓம்) என்கிருன். எனவே, அதுவே ஒன்றிய நிலே; இசைவுபெற்ற நிலே" என்று குறிப்பிடுகிருர். [சாந்தோக்கிய உபநிடதம் 1·1·8 (568)] திருமூலரும் இதை எதிரொலிக்கின்ருர்.

ஆமே சிவங்கள் அகார உகாரங்கள்
ஆமே பரங்கள் அறியாவிடம் என்ப
ஆமே திருக்கூத்த டங்கிய சிற்பரம்
ஆமே சிவகதி ஆனந்த மாமே. *(தந்திரம்-4. பாட்டு-8.)*

'ஓம்' என்ற ஒலியே உள்ளும் புறமும், பிண்டத்தும் அண்டத்தும் எங்குமாய்ப் பரந்து நிற்கின்றது.

தேவருறை கின்ற சிற்றம்பலம் என்றும்
தேவருறை கின்ற சிதம்பரம் என்றும்
தேவருறை கின்ற திருஅம்பலம் என்றும்
தேவருறை கின்ற தென்பொது வாமே.

உபநிடதமும் இதனையே அறிதியிட்டுரைக்கின்றது. 'ஓம்', இந்த ஒலியே உலகனைத்துமாகும். அதுவே, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாமுமாகும். எல்லாம் 'ஓம்' என்ற சொல்லே. முக்காலங்களையும் கடந்த வொன்றுளதேல்' அதுவும் அந்த 'ஓம்' என்ற சொல்லே" [மாண்டுக்கிய உபநிடதம் 1. 1. (571)]

சூக்குமமான மனத்தின் சூக்கும ஒலிப்படைப்பே 'ஓம்' என்ற மந்திரம். அதன் தூலஒலிவடிவே தூலப்பிரணவ மந்திரம். அதிலிருந்து பரிணமிப்பனவே ஏனைய மந்திரங்களெல்லாம் அவற்றிலிருந்து வளர்கின்றனவையே, இசை, வன்னம், பண், பாடல், உரை – யாவும் பொருள்களை வெவ்வேருய் அறிய வல்லனவாகிய பெயர்கள் அனைத்தும். எனவே ஓம் என்ற ஒலியினை பீஜமந்திரம் என்றனர். பீஜம் என்ருல் வித்து. வித்து மந்திரம் எனிலும் மூலமந்திரம் எனிலும் ஒன்றேயாகும்.

இந்த ஓம் என்ற ஒலியே நான்கு வேதங்களுமாயின என்பார். 'அ' என்ற ஒலி படைப்புத் தொழில் இயல்பைக் குறிக்கின்றதென்றோம். இருக்கு வேதத்தில் விதந்தோதப் படுவது படைப்புக் கடவுள் பிரமனையே. காத்தல் தொழிலைக் குறியீடு செய்யும் 'உ'கரஒலி யுசுர் வேதத்துக்கு நின்றது. ஆங்கே அதிதேவதையாகப் பொலிவது காத்தல் கடவுளாம் திருமாலாகும் சாமவேதம் துடைக்கும் தொழிலைச் செய்யும் உருத்திரனுக்கு உரியதாக அமைந்திருக்கின்றது. 'ம' என்ற ஒலியின் விரிவாகவே விளங்குகின்றது. அர்த்த மாத்திரை என்று வடமொழியில் சொல்லப்படும் புள்ளிவடிவே "அறியாத விடத்தை"ப் பற்றிய பல நுட்பங்களைக் கொண்ட அதர்வ வேத மாக உருப்பெற்றுள்ளது.

இராகம் : ரஞ்சனி   தாளம் : ஆதி

பல்லவி

எனக்கருள் புரிந்திடு வடிவேலா
மனக்குறை அகற்றிடு குணசீலா (எனக்)

அனுபல்லவி

தினமுனை துதிசெய்ய மறவேனே
கனக சபைநாதன் மருகோனே (எனக்)

சரணம்

கனவிலும் என்முன் அருள்வடிவாய்
மனதினில் நினைந்திடில் மகிழ்வுடனே
வினைதீர்த்தருள்தர வேலுடனே
விளங்கிடும்பாலா விரைவினில் வந்து (எனக்)

வி. கே. முத்தையா பிள்ளை, பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Tiruttondattogai.

திருத்தொண்டத்தொகை: பண்: கொல்லிக்கௌவாணம்

திருவாரூர்

'மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.'

I serve Murti Nayanar who ruled over the world by the sacred ash, Rudraksha and matted hair. I am the slave of Muruga Nayanar and St. Rudra Pasupati.

I am the servant of St. Tirunalaippovar, and serve the devotees of Tirukkuripputtonda Nayanar. Sandesa Nayanar severed his father's leg with an axe, as the father disturbed the saint in his worship; and the slave of that Sandesa am I, the servant of the Lord at Arur.

(To be continued)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருச்சுண்ணம்

சுண்ணமிடித்தல் மிகப் பழங்கால முதற்கொண்டே பெண்டிர் செய்யும் ஒரு தொழிலாயிருந்து வந்தது. இத்தொழிலுக்குரிய பாடல்களும் எழுந்தன. பிற்காலத்தார் இதனை வரிக்கூத்தினுள் ஒன்றாக அமைத்து, அதற்கேற்ற பாடல்களையும் யாத்தனர்.

பிற அச்சுப் பிரதிகளில், 'திருப்பொற்சுண்ணம்' என்னும் பெயரே காணப்படுகிறது. அகத்தியச் சூத்திரத்தில் காட்டிய படி திருச்சுண்ணம் என்பதே இங்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

இப்பாடல் தில்லையிலே அருளப்பெற்றது. இச்செய்தியைத் திருவாதவூரர் புராணம், திருவம்பலச் சருக்கம் (63-64) பாடல்கள் கூறும்.

கருணையின் பெருமை கண்டு அம்மானை ஆடினோர்கள் கருணையில் மூழ்குதற்குச் சுண்ணமிடித்தல் காரணமாகச் சிவானந்தவநுபூதியின் மூழ்குதலான அநுபவமாகையால், அந் நீராடற்குச் சுண்ணங் கருவி யாமே; அச்சுண்ணம்; ஆனந்தத்தில் அழுந்தினவர்கட்கு அவ்விளையாட்டுக்களெல்லாம் அந்த ஆனந்தத்தொழில் விளையாட்டாக இருக்கும். அந்தச் சுண்ணத்தை இடித்தலும், உரலும், உலக்கையும், சுண்ணமிடிக்கிற

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை-திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அநுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

வர்களும், அவ்விடமும், அதனுற்பெறும் பேறும் ஆனந்த விளை வாகையால் அதைச் சொல்லுமிடத்து அவ்வருள்மேல் வைத்துச் சொல்லுகிறபோது அதற்கேற்ற அலங்காரமும், தூபதீபாதி உபசாரமும், அதை இடிக்கிற சக்திகளும், பாடுகிற பாட்டுக் களும், அதனுல் வரும் பேறும், அதனுளெல்லாம் அடங்கியிருக் கும்; இம்முறையே உபதேசப் பொருளானதால் திருப்பாவின் முறையே அநுபூதி காண்க. அட்டசிவ சத்தியும் திருவை யாறும் அகலாத செம்பொற் சோதியை வணங்குதலான.

முத்துநற் றமம்பூ மாலைதூக்கி முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும் நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும் கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தனை யாறனம் மானைப்பாடி ஆடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

(இ - ள்). குஞ்சிதபாத பரங்கருணையின் மூழ்குவோரான சுத்தான்மாக்களுக்கும் பரமுத்தியிற் கண்ட முத்தி பஞ்சாக்கர பஞ்சநத நாதன் எழுந்தருளிய சுத்த சைதனிய போதாகாசமே திருஞானச் சுண்ணம் இடிப்பதற்கிடம்; திருவருளழகான முத்தி மண்டப அலங்கார அநுபோகம் விளைவதே வாலறிவான அநு போகம்; முத்துமாலை தொங்குவதாக நவந்தரபேத நவதானியப் பாலிகை அருட்குடம்; நகாரமகார மற்றச் சிவஞான தீபமாலை தூபம்; செறிந்தகையராகி நம் தேவதேவனுன மகாதேவனை ஞானசத்தியும் சோமசத்தியும், பூசத்தியும், கலைசத்தியும் திருப் பல்லாண்டு கூறவும், சிற்சத்தியும் கௌமாரிசத்தியும் பார்ப்பதி சத்தியும், கங்கைச்சத்தியும் சிவஞானகவரி வீசவும் இவ்வாறு உபசரித்து, 'அப்பனென்றும் ஐயாறனென்றும் திருவருளழகிய மணவாளனென்றும், இடைவிடாது பாடித் திருவிளையாடலான வேறின்மைத் திருஞானச் சுண்ணம் ஞானத்தால் மலத்தை இடிப் போம்; நாமாகிய ஞானப்பெண்களே! என அருளியதை அன் பாற் காண்க.

Karaikkal Ammaiyar and Her Celebrated Works

By

Sri. N. Ramalingam, M. A., B. O. L.,

Professor in Tamil,

S. S. B. S. Tamil College, Mailam.

By the side of the washing waves of the eastern sea, Karaikkal was a growing mercantile town in those days, in Bharatham where Punithavathi was born to Thanathathan, a wealthy merchant of the town. From her infancy, Punithavathi developed in her an ardent love and devotion for Siva and for His devotees; she identified herself with them. Her mind and act came to be coloured by saivism. Singing in praise of Siva, attending His devotees and adhering to the maxims of the religion, were her routine.

She was given in marriage at the proper age to Paramathathan, a native tradesman of Nagappattinam, another coastal town. But their life after marriage, had to be led at Karaikkal as the bride's father had no other daughter or son except Punithavathi.

One of the friends of Paramathathan, on paying a visit, presented him with two mango fruits; which he sent home. One of the fruits was served to a Saivaite monk, entertained by Punithavathi at her home in the fore-noon of that day.

The epicurean Paramathathan sat for his lunch at noon after a bath. Delicious meal was served with

one of the fruits, but he was not content without the other being served. He asked for the other one. She found it hard to narrate the event, and, at last she knelt and prayed to God Siva to help her in her sad helpless plight; and as the miracle would have it, she was blessed with another mango fruit in her hand, for her husband.

Paramathathan, on tasting that fruit and lost in its sweetness asked his wife of the history of the fruit. She revealed the miracle. On hearing her account, in an examining tone he told her to get one more fruit from God by Prayer.

Entering in to the room she prayed again; the same miracle got her another fruit. Paramathathan was awestriken at the sight of a miraculous mango fruit, in the hands of his wife. She gave it to him; but it vanished from sight the moment he got it.

Moved by this event, Paramathathan realised divinity in her and trembled with fear to treat Punithavathi as his wife any more. With untold fear, he left Karaikkal for the Pandiya country under the pretention that he was going to flourish in trade in a far off place.

By his second wife in Pandiya country, Paramathathan had a daughter whom he named Punithavathi, after his first wife, as Punithavathi assumed in him the status of a diety. As news of the life of Paramathathan reached Punithavathi, she left with relatives to meet Paramathathan, living in Pandiya country with another wife. With his second wife and children, Paramathathan met Punithavathi on her

way and worshipped at her feet. Her divinity was revealed by him to all her relatives. At this crux, Punithavathi eager to shedoff, the graceful fleshy stature and mundane beauty, prayed once again to Lord Siva, to bless her with a ghostly appearance, which was readily acceeded.

In the ghostly grace she left the bond of relation, in search of the eternal bliss. On her pilgrimage to Mount Kailas, where dwells God Siva with Uma, she composed many hymns in praise of Him. Arputhathiruvanthathi is one among them. Having seen the dancing Lord on Mount Kailas she returned to Thiruvalaukadu where she mingled in the bliss.

NOTE ON HER WORKS.

Savant Karaikkal Ammaiyar composed many hymns in praise of Lord Siva. (i. e.). Thiruvalangattu Moottha Thiruppathikams, Thiruvirattaimanimalai and Arputhathiruvanthathi.

In the Pathikam, she presents the pictorial view of crematorium with plenty of Ghosts and ferocious type of animals, which is the permanent place of Lord Siva for His continuous rhythmic dance. Generally, the descriptions of ghosts and their attitudes and activities are very common only in Parani genere (Prabandhas). But the vivid and paramount description of ghosts in her celebrated work is unparalleled and considered as a chief source for the Parani Genere.

Like all religious works Arputhathiruvanthathi, also abounds in tril ɹtes of Siva, maxims of the religion, and the poets' vision of the Lord besides conventional description of nature and similitudes.

Her sensual and conceptual experiencies have taken a bold relief in the verse. Like the morning sun in the horizon, all these hymns are always fresh and refreshing.

It seems proper to consider, Karaikkal Ammaiyar, to have lived around the 5th Century A. D., the period of Saivaite renaissance.

PONGAL - AN INVOCATION.

M. K. K. Kumaraswamy Chettiar.
Anupperpalayam, Tirupur-3

Hail Goddess Pongal
Benign and beneficient.
On thy sacred day, the first day of Thai month
When the sun his North-ward trek in the Heavens begins,
With the soft early breezes of summer for company,
Thy divinity illumines all hearths and homes
With sparkling Joy of the maiden cookings
From the harvest reapings, Worship of Sun God and the Cow
With milk-food, sugar-cane and luscious banana fruits
And merry feasting together of whole families and guests
Vouchsafing also a holiday and bumper-feeding
To the bulls on the busbandry farm.
Generous Deity! May I invoke you to shower choicest gifts
On this land of food shortage and ensure plenty.

சிவ சிவ

திருமாகறலில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு

சேமவைப்பு ரூ. 3000/-

திருநெறிய மெய்ஞ்ஞானத்தமிழ் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டில் ஆறுவதாக வைத்து எண்ணப்படுவதும், காஞ்சிபுரத்துக்குத் தென்கிழக்கே பத்துக் கல் தொலைவிலிருப்பதும், செய்யாறு என வழங்கும் சேயாற்றின் வடகரையிலிருப்பதும், மாக்கிரகன் என்ற அசுரன் இத் தலத்துப் பெருமானை வழிபட்டதால் அப்பெயர் மருவி மாகறல் என்று வழங்குவதெனத் தலபுராணத்துக் கூறப்பெறுவதும், பலாவைத்தலவிருட்சமாக உடையதாயிருந்ததும், உறையூர்ச் சோழன் இராசேந்திரன் என்பான் காலத்தில் நாடோறும் ஒரு பலாக்கனி தில்லைப் பெருமானுக்கு நிவேதனம் செய்ய அனுப்பப் பெற்று வந்ததாகப் புராணச் செய்தியுடையதும், இறைவன் பொன் உடும்புவடிவாகச் சென்று மறைந்த இடத்தில் சிவலிங்கவுருவத்தைக் கண்டு எடுப்பித்த கோயில் என்று தலபுராணம் கூறும் பெருமையுடையதும், "தீவினைகள் தீருமுடனே–வினையகலுமே – வினைபறையுமுடனே–வினைகள் அகலுமிகவே–வினை நிற்றலில் போகுமுடனே" என்று தீவினைகள் நீங்குவதாகிய திருப்பதிகம் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்றதும் ஆகிய திருமாகறல் என்னும் திருத்தலத்தில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் சிவப்பேறு எய்திய திருநாளில் அந்தணர், அருந்தவர், ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு நிகழ்த்துதற் பொருட்டு இத் தருமம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்றது. இது 'திருமாகறலில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவுநாள் அன்னம் பாலிப்பு நிதி' எனப் பெயர் பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 3000/- ரூபா மூவாயிரம். இது கும்பகோணம் இந்தியன் பாங்கில் நிலையான சேமவைப்பாக முதலீடு செய்யப்பெற்றுள்ளது. பிக்சட் டிபாஸிட் 65/ FD நெ. B 002488 – தேதி, 25—2—66 – 9 வருடங்கள் 7–1/2% – ரூ. 3000/- இது நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலிக்கப்பெற்று வரும்.

3. திருக்கேதாரம்	ரிஷிகேசம்	ஹரத்துவார்
டில்லி	வாரணாசி	பிரயாகை
காளஹஸ்தி	திருத்தணிகை	வடதிருவாலங்காடு
திருவொற்றியூர்	சென்னை	திருக்கழுக்குன்றம்
காஞ்சீபுரம்	திருவண்ணாமலை	திருக்கோவலூர்
விருத்தாசலம்	திருப்பாதிரிப்புலியூர்	சிதம்பரம்
ஆச்சாள்புரம்	சீர்காழி	வைத்தீசுவரன்கோவில்
மாயூரம்	ஆக்கூர்	காவிரிப்பூம்பட்டினம்
திருநள்ளாறு	திருநாகைக்காரோணம்	திருவாரூர்
திருப்புகலூர்	வேதாரண்யம்	திருப்பனந்தாள்
திருவிடைமருதூர்	சுவாமிமலை	திருவையாறு
திருவானைக்கா	விராலிமலை	பழநி
மதுரை	திருப்பெருந்துறை	உத்தரகோசமங்கை
திருக்குற்றாலம்	பழையபாசபநாசம்	திருநெல்வேலி
ஸ்ரீவைகுண்டம்	திருச்செந்தூர்	கன்னியாகுமரி

இராமேசுவரம் என்னும் 46 தலங்களில் நம்மால் முதற் பொருள் நிறுவப்பெற்று ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவு நாளில் நம்மால் அன்னம்பாலிப்பு நிகழ்த்தப்பெற்று வருகிறது. அங்ஙனமே இச்சேமவைப்பினின்று கிடைக்கும் வட்டித்தொகையில் இத்தருமத்தைப் பரிபாலிப்பதற்குரிய நிர்வாகச் செலவுகள் போக எஞ்சிய தொகை முழுதும், ஆண்டுதோறும் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் சிவப்பேறு எய்திய வைகாசி அமரபக்ஷம் திருதியைநாளில் திருமாகறல் என்னும் தலத்தில் அந்தணர், அருந்தவர் ஏழைகளுக்கு அன்னம்பாலிப்பு நிகழ்த்துதற் பொருட்டுச் செலவு செய்யப் பெறும்.

4. ஆண்டு தோறும் வட்டி வரவுக்கேற்பவும் காலவிலைக்கு ஏற்பவும் நம்மால் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி திருமாகறலில் இவ்வன்னம்பாலிப்பு நடத்தப்பெற்று வரும்.

5. இவ்வட்டி வருமானம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப்பெறமாட்டாது. இம்முதற் பொருள் நம்பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்து வரும். இம்முதற் பொருள் திரும்பியளிக்கப்பெறின் அதிகவட்டி தரக்கூடிய நிலையான முதலீடுகளில் முதலீடு செய்யப்பெறும்.

"கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி செஞ்சடையி னானடியையே
நுங்கள்வினை தீரமிக வேத்திவழி பாடுநுக ராவெழுமினே" — சம்பந்தர்

Tirupanandal
Dated 26-2-1966 } (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Kumbakonam Sub Registrar's office on 26-2-1966 as 17 of 1966 of Book 4 volume 79 pages 162 to 164.